வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,245,10,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,933,96,14,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலை துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இந்த அவையில் கூறும்போது, ** என்று கூறினார். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அதேபோன்று நான் இப்பொழுது சொன்ன அந்த வார்த்தைகளும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-4-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

52. மின் உற்பத்தி இயந்திரம் வாயிலாக மின்சக்தி தயாரிப்பதை ஊக்குவிக்கும் வகையில் யாதொரு வணிகர் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள தொழிலக நுகர்வோருக்கு உயதுலை எண்ணெய் விற்பனை செய்வதன் மீது செலுத்தத்தக்க வரியினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஏப்ரல் 28

நிபந்தனைக்கு உட்பட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2)த் துறையின் 5-3-2008 ஆம் நாளிட்ட 25 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

129. மானியக் கோரிக்கை எண் 21 - நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

130. நெடுஞ்சாலைகள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

131. இந்து சமய அறநிலைத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

132. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

133. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. (2007-2008)

134. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. (2007-2008)

135. பொதுக் கணக்குக் குழுவின் நூறாவது அறிக்கை. (2007-2008)

136. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை. (2007-2008)

137. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை. (2007-2008)

138. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை. (2007-2008)